கடவுள் மனிதனானார் என்ற எளிமையான இதயத்தை ஊடுருவும் செய்தி, ஆண்டவரின் புத்தாண்டு நமக்கு நற்செய்தியையும் புதிய தொடக்கத்தின் வாழ்த்தொலியையும் வழங்குகிறது. மாபெரும் புதிரான காட்சி என்பதையே ‘திருக்காட்சி’ என்ற கிரேக்க சொல் குறிக்கிறது. காரிருள் வேளையில் மிகவும் எளிமையான வகையில் ‘உலகின் ஒளியாக’ இயேசு நமக்கு வெளிப்படுத்தப்பட்டார். உலகப் பாடுகளிலிருந்து மனுக்குலத்தையேக் காப்பாற்றும் வாக்குறுதியுடன் அவர் வருகிறார். அவரது வார்த்தை வழியாக அந்த ஒளி பிரகாசிக்கும் என்பதை இறைவாக்கினர் எசாயா முன்னறிவித்தார் (திப. 36:9). காரணம் கிறிஸ்துவின் திருக்காட்சி வழி மனுக்குலத்தோடு அவரை இணைத்துள்ளது.

> பொன் அரசத்துவத்தையும் சாம்பிராணி தெய்வீகத்தையும், வெள்ளைப்போளம் நல்லடக்கத்தையும் குறிக்கின்றன. அதனால், அரசராக பொன்னையும், தெய்வமாக சாம்பிராணியையும், மனிதனாக வெள்ளைப்போளத்தையும் அவருக்கு அவர்கள் வழங்கினர்.
>
> - புனித ஜோன் கிறிஸ்சஸ்தம்

அந்த மூன்று ஞானிகள், அவருக்கு அஞ்சலி செலுத்த வந்த அவர்கள் புறவினத்தவர், அரசருக்கு செலுத்த வேண்டிய பரிசுப்பொருட்களுடன் வந்தனர். நம் அனைவரையும் பிரதிநிதிக்கும் அவர்களைப் போல் நாமும் செய்ய வேண்டும் என்ற உள்ளுணர்வு ஏற்படவில்லையா? இறைமக்கள் என்ற வகையில் அவரைத் தேடும் எண்ணம் நமது உள்ளத்தின் ஆழத்தில் ஏற்பட வேண்டும் அந்த ஞானிகள் போல் மண்டியிட்டு அவருக்கு புகழும் ஆராதனையும் செய்வது, மண்ணுலகிலும் விண்ணுலகிலும் அவரது அரசாட்சிக்குச் சான்றுபகரும். ஏனெனில் அவர் இம்மானுவேல், கடவுள் நம்மோடு எக்காலத்திலும்.

இன்றைய வாசகங்களிலிருந்து எந்த அளவுக்கு ஆறுதல் பெற முடியும் என்பதை படித்து, தியானித்துப் பாருங்கள். மீட்பளிக்கும் வாக்குறுதி வழி நமக்கு நம்பிக்கையை கடவுள் வழங்கியுள்ளார்...உடன் உரிமையாளரும் ஒரே உடலின் உறுப்பினரும் வாக்குறுதியின் உடன் பங்காளிகளும் ஆகியிருக்கிறார். முதல் வாசகத்தை நமது சிந்தனைக்கும் வாழ்க்கை நடைமுறைக்கும் எடுத்துக் கொள்ளலாம். முதலாவது, பரிசுப்பொருள்களை தாங்கி வந்து ஞானிகள் போல் ஆண்டவருக்கு எவ்வாறு பரிசளிக்க முடியும்... நமது நேரத்தை, அனுபவத்தை, நிபுணத் துவத்தை பரிசளித்து, பிறருக்குச் சேவையாற்ற முடியும். இரண்டாவது, ஞானிகள் “வேறு வழியாகத் தங்கள் நாடு திரும்பினார்கள்” என்பதை கவனிக்க வேண்டும். இயேசுவோடு உறவு கொண்டு வாழும் போது, நீங்களும் நானும் அதே வழியில் திரும்புவதில்லை. சிந்தித்துப் பாருங்கள், இது ஆறுதலையும் உந்துதலையும் வழங்கவில்லையா? இதற்கு மேலே, எல்லாக் கத்தோலிக்கர்களுக்கும் இது தனிப்பட்ட முறையிலும் சமூக முறையிலும் ஆண்டவரின் திருக்காட்சி அனுபவமாக அமையும்! ✝



INTERNAL CIRCULATION ONLY
BUL 01/2018

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

*Print:* Steno Print Sdn Bhd
*Design:* The Mustard Seed Studio

எதிர்நோக்கம் கொண்ட சீடர்களாகுவோம்

# Newbec

NEW WAY OF BEING CHURCH

7 ஜனவர 2017
ஆண்டவரின் திருக்காட்சி



# எளிமையானது ஆனால் மனதைத் தொடும் வெளிப்பாடு

இந்த வாரம் பசுமையான பச்சை நிறம் நமது பீடங்களை அலங்கரிப்பதை நாம் காணலாம். இலை உதிர் காலம், குளிர் காலத்தை அடுத்து புது உயிர் வருவது போல, நம்பிக்கை தரும் பச்சை நிறம், இயற்கையில் வளர்ச்சியாக காணப்படுகிறது. அதே போல், கிறிஸ்துவர்கள் என்ற முறையில் நமது பயணமும் மகிழ்ச்சியான நம்பிக்கை கொண்டது. கிறிஸ்துவின் தலைமையில் திருச்சபையின் திருவழிபாட்டு ஆண்டு வாயிலாக, கிறிஸ்துவின் சிலுவைப் பாதையில், அப்போஸ்தலர்களுக்கு தூய ஆவி வந்திறங்கிய மேல் அறையைக் கடந்து, இறையாட்சியின் எதிர்பார்ப்போடு உலகில் நம்பிக்கையோடு வாழ்வோம்.

இன்று, பல பச்சை நிற ஞாயிற்றுக்கிழமைகள் போல், மனதிற்கு இதமான அதே வேளையில் எச்சரிக்கையான நம்பிக்கை செய்தியை வழங்குகின்றோம். இன்றைய நற்செய்தியில், தமது முதவலாது சீடரை இயேசு சந்திக்கிறார் என புனித யோவான் கூறுகிறார். “என்ன தேடுகிறீர்கள்” என்ற கேள்வியோடு தமது உறவை இயேசு தொடங்குகிறார். இந்த கேள்விக்கு நமது பதிலும், நமது சீடத்துவப் பயணத்தை வரையறுக்கிறது. இயேசுவைச் சந்திக்கும் வேளையில், நீண்ட பட்டியலை வைத்திருப்போர், அவர் வழங்கவிருக்கும் பொருள்களை நழுவ விடக்கூடும். நமது ஆசைகளையும் எதிர்பார்ப்பையும் பூர்த்திச் செய்து கொள்ளும் ஆர்வத்தில், சீடத்துவத்தின் உண்மையான பொருளைப் புரிந்து கொள்ளாத கிறிஸ்துவர்கள் என்ற வலைக்குள் நாமும் சிக்கிக் கொள்ளள நேரிடும். அந்திரேயாவும் பெயர் குறிப்பிடாத மற்றொரு சீடரும் இயேசுவோடு இருக்க மட்டுமே விரும்பினர். அவர் தங்களை வழிநடத்த வேண்டும் எனவும் விரும்பினர்.

அவர்களின் சந்திப்பு ஏறக்குறைய மாலை நான்கு மணிக்கு நிகழ்ந்ததாக நற்செய்தியாளர் கூறுகிறார். சிலுவையில் நமதாண்டவர் இறப்பதற்கு ஒரு மணி நேரத்திற்கு பின்னர் என்பது குறிப்பிடத்தக்கது. நம்மைப் போன்ற புதிய சீடர்களுக்கு இயேசுவோடு வாழ்நாள் எல்லாம் நடந்து செல்லவும் போதனையைக் கேட்டு உண்மையாக சீடர்களா மாறும் நாளுக்கு முன்பு, தொடக்கத்திலிருந்து அனைத்தையும் ஆழமாக புரிந்து கொள்வதற்கு முன்னர், இந்த சீடர்களைப் போல் நாமும் வாழ்நாள் முழுவதும் இயேசுவோடு நடந்து செல்ல முடியும். ஆயினும் நாம் முந்தி செல்ல முடியாது என்ற செய்தியையும் புரிந்து கொள்ள வேண்டும்.

மெசியாவைக் கண்டு கொண்டேன் என்ற செய்தியை தமது சகோதரர் சீமோனிடம் தாமதமின்றி தெரிவிக்கிறார், அந்திரேயா. “ஆனால் நீங்கள், நான் யார் எனச் சொல்கிறீர்கள்?” என இயேசு கேட்ட போது பேதுரு அளித்தப் பதில் இந்த விசுவாசத்தில்தான். இதுவே சீடத்துவத்திற்கான நிபந்தனை. ஆயினும், மெசியா என கூறிக்கொண்டு ஆயிரம் பேர் வருவார்கள், ஆனால் ஆண்டவர் ஒருவரே, இயேசு கிறிஸ்து. அவரது தூயத்தன்மை, மகத்துவம், கடவுளுடனான அவரது உறவை அறிந்து கொண்டாலும், அவரது வருகையை சீடர்கள் முழுமையாக அறிந்து கொண்டாரில்லை. இது நல்லதொரு தொடக்கமாக இருக்கலாம், ஆனால் இறுதியில் “எனக்கு இயேசு யார்?” என்ற கேள்வியில் நமது சீடத்துவம் தொங்கி நிற்கிறது.

இந்த கேள்விக்கு எவ்வாறு பதிலைக் கண்டடைவது? கிறிஸ்து அழைத்துச் செல்லும் பாதையில் தொடர்வது, அவரது வார்த்தைக்கு செவி கொடுப்பது, தாழ்மையை உள்ளத்தில் ஏற்றுக் கொள்வது வழியாக இதற்கான பதிலைக் காணலாம். கிறிஸ்துவோடு பயணிப்பதில் இந்த நம்பிக்கையைக் கொண்டிருக்க வேண்டும். தலைவனை விட எல்லாம் தெரிந்து விட்டது என்ற சில சீடர்களைப் போல் இருக்கக்கூடாது. அதே வேளையில், அதனை இழந்து விடாமல், இறையாட்சியின் ரகசியம் வெளிப்படும் வரை நம்பிக்கை கைவிடாது காத்துக் கொள்ள வேண்டும். முன்னேறிச் செல்வதில் ஏற்படும் சிக்கல்களையும் சிரமங்களையும் கடந்து, நமது பாதைக்கு ஒளிவிளக்காய் இருப்பது இந்த நம்பிக்கையே. செடியின் முதல் துளிர் விடுவது ஊக்கமளிப்பதாக இருந்தாலும், தொடர்ந்து வரும் கோடையும் குளிர்காலமும் நம்மை பள்ளத்திற்குத் தள்ளிவிடாமல் தாங்கி நிற்கும் நங்கூரமாக இருப்பது இந்த நம்பிக்கையே. சிலுவைப் பாதைக்கு அப்பாலும், கிறிஸ்துவைப் பின்பற்றி செல்வதில் இந்த நம்பிக்கை நம்மை உறுதிப்பெறச் செய்யும். தந்தையாகிய கடவுள் தூய ஆவியின் ஐக்கியத்தில் நிகழும் ஆட்சியில் கிறிஸ்துவோடு என்றென்றும் வாழ்வோமாக! ✝


INTERNAL CIRCULATION ONLY
BUL 02/2018
*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org
*Print:* Steno Print Sdn Bhd
*Design:* The Mustard Seed Studio



எதிர்நோக்கம் கொண்ட சீடர்களாகுவோம்

# Newbec

NEW WAY OF BEING CHURCH

14 ஜனவரி 2017
பொது காலம் 2ம் ஞாயிறு




# எனை ஆளும் நம்பிக்கை

இன்றைய நற்செய்தியில் முதல் சீடர்க்ள் அனைத்தையும் துறந்து கிறிஸ்துவைப் பின்பற்றியது போல, இந்த நம்பிக்கை நமது உள்ளத்தில் எதை ஊடுருவச் செய்யும்? கிறிஸ்துவைப் பின்பற்றுவதற்கு தங்களது உடைமைகளை அனைத்தையும் விட்டுச் சென்ற சீடர்களின் விசுவாசச் செயலை, அது அக்காலச் செயல் என எளிதில் நாம் ஓரம் கட்டிவிடுகிறோம். குடும்பம், தொழில், கௌரவம், சமுதாய அந்தஸ்து போன்றவை அவர்களுக்கும் இருந்தன. ஆனால் ஒரு மனிதனின் மீதான நம்பிக்கையால் அனைத்தையும் உதறித் தள்ளினர்

கிறிஸ்துவ நம்பிக்கை என்பது “நமது சொந்த பலத்தினால் அல்லாமல், தூய ஆவியின் அருளின் துணையோடு கிறிஸ்துவின் வாக்குறுதி மீது நமது நம்பிக்கை வைத்து, நித்திய பரலோக வாழ்வே நமது பேரின்பம் என நாம் ஆசிப்பது” என மறைக்கல்வி படிப்பினை கூறுகிறது. எந்தவொரு உலக இன்பமும் தீர்க்க முடியாது ஆசையைத் தூண்டும் நமது ஆன்மாவிற்கும் கடவுளுக்கும் இடையிலான கலந்துரையாடலே, நம்பிக்கை. “ஆனால் காலம் நிறைவேறிவிட்டது, இறையாட்சி நெருங்கி வந்து விட்டது...” என்ற வாசகத்தோடு இந்த கலந்துரையாடலை தொடங்கினார் கிறிஸ்து. இந்த வாசகம் உங்கள் உள்ளத்தில் பேரின்பத்தின் எதிர்பார்ப்பைத் தூண்டவில்லை என்றால் ‘சொந்த இறையாட்சியில்’ நாம் திளைத்திருக்கிறோம் எனப் பொருள்படும்.

நாம் வாழ்க்கையின் எந்த நிலையில் இருந்தாலும், கடவுள் நம் ஒவ்வொருவரையும் அழைக்கிறார். கடவுளின் அழைப்பை செவிமடுப்பதற்குத் தேவையான அனைத்தும் நமக்கு வழங்கப்பட்டிருக்கிறது. இந்த உலகத்தில் நாம் சுமக்கும் சுமைகளை இறக்கி வைக்கும் நன்னாளை எதிர்பார்த்திருக்கிறோம். ஆயினும் நிலைத்தன்மையும் குளப்பமும் நிலவும் வேளையில், இதற்கு மாறாகவே எண்ணங்கள் இருக்கின்றன. இந்த காலத்தில் இருப்பதில் நாம் உள்ளம் மனநிறைவு கொள்கிறது. சுய வலிமையும் சுய பலத்தையும் நம்பி இருக்கிறோம். நாம் அனுபவிக்கும் இந்த இன்பத்தை இறையாட்சிக்கான கைவிடுவது, கடினமாக இருக்கிறது. நமது செபத்தில் நமது நிலைக்கு இறையாட்சியை நாம் கொண்டு வரும் போது, இந்த வாழ்க்கையிலேயே பேரின்பத்தை எதிர்பார்க்கிறோம். இதனால் கிறிஸ்து நமக்காக கொண்டு வந்த நம்பிக்கை அணைத்துப் போய்விடுகிறது.

முதல் சீடர்கள் மகிழச்சியான நல்லதொரு வாழ்க்கையை வாழ்ந்து வந்தார்கள். கிறிஸ்துவின் அழைப்பைக் கேட்டது, அவர்களின் எதிர்பார்ப்பு மாறியது. மீனவர்கள் என்ற அனுபவத்தில், தங்களது சொந்த திறமையை மட்டும் நம்பி இல்லை, அவர்களது திறமையை விட ஏதோ மற்றொன்று தேவை என்பதை உணர்ந்தார்கள். அன்றாட தொழிலில் கடலின் ஆழத்திற்கு அடித்துச் செல்லும் அலையும், உயிரையே பணயம் வைக்கும் உயரும் கடலின் சீற்றமும், தங்களது சொந்த பலத்தாலோ திறமையாலோ மேற்கொள்ள முடியாது என்பதை அவர்கள் நன்கு உணர்ந்திருந்தனர். முதல் சீடர்களை அழைத்த போது, இதை விட மேலான ஒன்றுக்கு கிறிஸ்து கொண்டு சென்றார். நமது மீட்பின் பணியில் உடனுழைப்பாளர்களாக இருக்க அவர் அழைத்தார். வாழ்வின் அருளைக் கொண்டு வரும் மகிழ்ச்சியின் ஊற்றுக்கு அழைத்துச் செல்லும் நம்பிக்கைக்கு அவர்களை அவர் அழைத்தார்.

இறையியல் பண்பில் பார்த்தால், தூய அருளின் துணையுடன் மனிதனின் செயலால் நம்பிக்கை அடைய முடியும். மகிழ்ச்சியை தேடி அலையும் நாம் அனைவரும், கடவுளைத் தேடுவதில் நம்மை அர்ப்பணிக்க வேண்டும். நமது சக்திக்கு அப்பால் இருக்கும் மகிழ்ச்சியைக் காண முடியும். இதற்கே கிறிஸ்து இன்று நம்மை அழைக்கிறார். இந்த மகிழ்ச்சி உலகைச் சார்ந்ததாக இருக்கும் என எண்ணலாகாது. எண்ணற்ற வேதசாட்சிகளின் தியாகத்தால் கட்டப்பட்ட திருச்சபை இதற்கு மாறான மகிழ்ச்சியை வழங்குகிறது. கிறிஸ்துவில் நாம் காணும் மகிழ்ச்சி, உலகைச் சார்ந்த இன்பத்தை மஞ்சி விடும். இதனால், சீடர்கள் தங்களது குடும்பத்தையும் வாழ்க்கையையும் விட்டு விட்டு, மகிழ்ச்சியின் ஊற்றை நம்மைப் போல் பின்பற்றினர். ✝

INTERNAL CIRCULATION ONLY
BUL 03/2018
*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org
*Print:* Steno Print Sdn Bhd
*Design:* The Mustard Seed Studio

எதிர்நோக்கம் கொண்ட சீடர்களாகுவோம்
21 ஜனவர 2017
பொது காலம் 3ம் ஞாயிறு

Newbec
NEW WAY OF BEING CHURCH

# என்னை வழிநடத்தும் நம்பிக்கை



**க**ப்பர்நாகு– இறைவாக்கினர் நாகூமின் பெயர் கொண்ட இந்த ஊர், சபத் நாள் (ஓய்வுநாள்) மற்றும் சபத் நாளில் ஓய்வுக்குரிய இடமாக இருந்தது. இது தற்செயலாக அல்ல மாறாக இறைவாக்கு, சரித்திரக்குறிப்பு மற்றும் இயேசுவின் பணியின் சின்னமாக கப்பர்நாகு அமைந்தது.

வானத்தையும் பூமியையும் படைத்த இறைவனே ஓய்வெடுத்தார் என்பதை நினைவுகூரும் காரணமாகவும் மற்றும் எகிப்தில் எபிரேயர்களின் விடுதலை, மெசியா வரும் காலம் மற்றும் மறுஉலக வாழ்வு நம்பிக்கை காரணமாகவும் சபத், தேவனுக்குரிய நாளாக அறிவிக்கப்பட்டது. தெய்வீக எண்ணத்துடன், உடல் ஓய்வுக்காக சட்டமாக உருவாக்கப்பட்டது. கடன் திருநாளாக நமது காலத்தில் பழக்கத்தில் இருக்கிறது. காலப்போக்கில் தெய்வீகத் தன்மை தேய்ந்து, மனிதனின் உலகத்தன்மை நாளாக மாறியது. இதன் காரணமாகவே சபத் நாளில் கப்பர்நாகுவை இயேசு தேர்வு செய்தார். மற்ற இடங்களில் மக்களுக்குப் போதித்தார்.

அசுத்த ஆவியை அடக்கி ஆளும், “நீர் கடவுளுக்கு அர்ப்பணமானவர்” என இயேசுவை அடையாளம் கூறுகிறது. இது ஒரு இறைவாக்கினர் பட்டம் அல்ல, உலகத்தை மீட்க வருபவர் என எதிர்பார்க்கப்படும் விடுதலையாளர். கடவுளுக்கு அர்ப்பணமானவர் சபத் நாளின் புனிதத்ததை நிலைநாட்ட வருகிறார். அதன் முழு அர்த்தத்தை தெரிவிக்கவும் பழைய கருத்திற்குக் கொண்டு செல்லவும் வருகிறார். அதன் முதல் அடையாளமாக, அசுத்த ஆவியின் மீதாக தமது அதிகாரத்தைக் காட்டுகிறார். அந்த மனிதனை பிடித்திருந்த அசுத்த ஆவியை விரட்டி, அவதிக்குள்ளான அவரது ஆன்மாவிற்கு சமாதானத்தை இயேசு கொண்டு வருகிறார். இந்த தொடக்க கால அற்புதத்தை தவிர்து, இதர பல அற்புதங்களை கப்பர்நாகும் ஊரில் இயேசு செய்தார். ஆனால் கப்பர்நாகும் ஊர் மக்கள் அவரை உதாசீனம் செய்தனர். “கப்பர்நாகுமே, நீ வானளாவ உயர்த்தப்படுவாயோ? இல்லை, பாதாளம் வரை தாழ்த்தப்படுவாய்...” (மத்.11:23).

ஆண்டவர் நாளை (கடன் திருநாள் – ஓய்வு நாள்) அனுசரிக்காத உதாசீனம் செய்யும் போது நமக்கும் இதே மாதிரியான தீர்ப்புக் காத்திருக்கிறது. வேலையிலிருந்து ஓய்வு பெறவும் இறைவனை மகிமைப்படுத்துவதற்கும் ஆண்டவர் நாள் அனுசரிக்கப்படுகிறது. கடன் திருநாள் என்ற முறையில் ஒப்புக்கு ஆண்டவர் நாளில் திருப்பலிக்கு வருவதல்ல, மாறாக உயிருள்ள கடவுளை ஆராதணை செய்வத்றகு. அவரே நம்மை பாவத்திலிருந்தும் மரணத்திலிருந்தும் நம்மை மீட்பார். நற்கருணையில் பங்கு கொள்வது, சமூக விருந்தின் அடையாளமல்ல. அது உண்மையாகவே கிறிஸ்துவின் உடலாக கருதப்படுகிறது.

எனவே, உங்கள் ஞாயிற்றுக்கிழமை பொழுது எவ்வாறு போனது? பரிசேயர், சதுசேயர்கள் போல் வெறும் கடமை நிறைவேற்றும் நாளாக இருக்கிறதா? ஆண்டவரன் மாபெரும் அற்புதச் செயல், நற்கருணை நம்மை புனிதமாக்கி, ஊக்கமூட்டுகிறது. அடுத்த ஞாயிற்றுக்கிழமைக்கு வரும் போது நமது கவலை, துக்கம் முதலியவற்றுக்கு ஓய்வு கொடுக்க அவரது தசையையும் இரத்தத்தையும் உட்கொள்கிறோம். அரசது வார்த்தையும் உடலும் நமது பாவத்தின் வடுக்களை ஆற்றி தூய்மைப்படுத்துகிறது. அவரது இறையாட்சியின் நீடித்த நித்திய சமாதானத்தை முன்சுவைக்கிறோம். ✝

INTERNAL CIRCULATION ONLY
BUL 04/2018

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

*Print:* Steno Print Sdn Bhd
*Design:* The Mustard Seed Studio

எதிர்நோக்கம் கொண்ட சீடர்களாகுவோம்

28 ஜனவரா 2017
பொது காலம் 4ம் ஞாயிறு

# Newbec

N E W W A Y O F B E I N G C H U R C H



# நம்பிக்கையில் தஞ்சம் புகுந்தேன்